**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் – 01.04.2025</u>**

**<u>முன்னிலை</u>**

# திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
# மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண். SA 3958/SCIC/2023</u>

திரு.சி.ஹரிஹரராஜு — மேல்முறையீட்டாளர்
பிளாட் நெம்பர் 54, T.S,N.அவென்யூ
ஏர்போர்ட் போஸ்ட்
திருச்சி - 620 007

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம் … பொது அதிகார அமைப்பு
திருச்சி

**<u>ஆணை</u>**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 09/01/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவு அலுவலகம், திருச்சி அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “பொருள்: மோசடி (Fraudulant) பதிவை நீக்கம் (deleting) செய்யக் கோருவது தொடர்பாக நான் இரண்டு மனுக்களை தங்களுக்கு அனுப்பியிருந்தேன். அவைகள் மனு எண்.01/Prakash நாள் 06/07/2021 மற்றும் மனு எண்.01/Sidharth நாள் 06/07/2021 ஆகும். அம்மனுக்கள் முறையே கோப்பு எண்கள் 9110/ஆ4/2021 மற்றும் 9111/ஆ4/2021 ஆக பதிவு செய்யப்பட்டு இது நாள் வரை 3 விசாரணைகளுக்கு நான் அழைக்கப்பட்டு ஆஜராகியுள்ளேன். - தொடர்பாக - இறுதி விசாரணை 12/07/2022 அன்று நடந்த பிறகு இதுநாள் வரை என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென்ற தகவல் எனக்கு கிடைக்கப் பெறவில்லை. எனவே அத்தகவலை தகுந்த ஆதார ஆவணங்களுடன் வழங்கவும் ” என்பன போன்று 3 (மூன்று) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர் (நிர்), திருச்சிராப்பள்ளி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.468/ஆ4/2023, நாள் /01/2023 வாயிலாக பதில் அனுப்பியுள்ளார். மனுதார ர் அதனை 14/02/2023 அன்று பெற்றுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 15/02/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர்/துணைப் பதிவுத்துறைத் தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.1024/ஈ/2023, நாள் 21/02/2023 வாயிலாக, பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய பதில் சரியானது என தகவல் அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 01/03/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 3958/SCIC/2023 ஆக பதிவு செய்து. மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 07/06/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. பின்னர், பொது தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் (நிர்), திருச்சிராப்பள்ளி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.8110/ஆ4/2023, நாள் 27/06/2023 வாயிலாக இனவாரியான தகவல்களை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் 16/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை கடிதம் அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 01/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**4.** இன்றைய விசாரணைக்கு, பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.A.சுரேஷ்குமார், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), திருச்சிராப்பள்ளி அவர்கள் ஆஜரானார். மனுதாரர் ஆஜராகவில்லை. எனினும், மனுதாரர் 21/03/2025 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தான் உடல்நலன் சரியில்லாத காரணத்தினால், மருந்துகள் உதவியுடன் வாழ்ந்து வருவதால், தன்னால் நீண்ட தூரம் பயணித்து நேரடி விசாரணையில் கலந்து கொள்ள இயலவில்லை என்றும் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு உத்தரவிடுமாறு ஆணையத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். எனவே, ஆணையம், இவ்வழக்கினை அடுத்த காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு ஒத்தி வைக்கிறது. ஆணையத்தின் அழைப்பாணை பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மனுதாரருக்கு அனுப்பப்பட வேண்டும்.

**ஓம்./-(முகம்மது ஷகீல் அஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

3

**<u>வழக்கு எண். SA 3958/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
திருச்சி

**4**

**மேல்முறையீட்டாளர்**

திரு.சி.ஹரிஹரராஜு
பிளாட் நெம்பர் 54, T.S,N.அவென்யூ
ஏர்போர்ட் போஸ்ட், திருச்சி - 620 007

RG/PC